**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஸ்ரீரங்கம்,**

**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2025–ம் ஆண்டு மே திங்கள் 19 –ஆம் நாள், திங்கட்க்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 301/2019**

**CNR.NO.TNTP190022852019**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக பெட்டவாய்த்தலை காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்கள், குற்ற எண். 476/2009 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரி : திரு. மனோகரன் (வயது 31 /2009)<br>த/பெ. தடியப்பன் |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவு 304(A) |
| வனையப்பட்டது | இதச பிரிவு 304(A) |
| தண்டிக்கப்பட்டது | **எதிரி ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.**<br>**இறுதியாக, அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 304(A) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரி;க்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |
| தீர்மானம் | எதிரி குற்றவாளி இல்லை |
| குற்றம்சாட்டப்பட்டவர் விபரம் | |

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு. மனோகரன் | திரு. தடியப்பன் | இந்து | கூலி | எஸ்லீயம்மன் கோவில் பட்டி, கரூர் மாவட்டம் | 31/09 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 28.11.2009 |
| புகார் | : | 28.11.2009 |
| கைது தேதி | : | 28.11.2009 |
| பிணை விடுவிப்பு | : | 28.11.2009 (Station Bail) |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 09.10.2012 |
| விசாரணை முடிவு | : | 19.05.2025 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | N.A |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 28.09.2012 |
| Date of Questioning | : | 29.10.2012 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | N.A |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief / Cross<br>(1) 25.02.2013 / 25.02.2013<br>(2) 25.02.2013 / 25.02.2013<br>(3) 25.02.2013 / 25.02.2013<br>(4) 25.02.2013 / 25.02.2013<br>(5) 12.09.2013 / 12.09.2013<br>(6) 17.03.2017 / 17.03.2017<br>(7) 01.04.2025 / 01.04.2025 |
| சட்டப்பிரிவு 313(1)(b) | : | 01.04.2025 |

| | | |
|---|---|---|
| கு.வி.மு.ச – விசாரணை தேதி | | |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 ல் CC.No.191/2012 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, பின்னர் மாறுதல் மூலம் கடந்த 24.09.2019 அன்று CC. No. 301/2019 ஆக இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இன்று 19.05.2025 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. இப்ராஹிம், அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

ஜீயபுரம் காவல் நிலைய சரக எல்லைக்குட்ப்பட்ட சிறுகமணியில் திருச்சி – கரூர் மெயின்ரோட்டில் கடந்த 28.11.2009 ந்தேதி காலை 06.15 மணிக்கு இறந்து போன கார்த்திக் @ கார்த்திகேயன் சிறுகமணி மெயின்ரோட்ல் இடதுபுறம் ஓரமாக நின்றுக் கொண்டிருந்த பொழுது எதிரி மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 47 V 9699 MMM என்ற பேருந்தினை எதிரி அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து கார்த்திக் மீது மோதியதில் அவர் தலையின் பின்புறமும், இடது கண் புருவம், முழங்கால் , இடது தொடையில் காயம் ஏற்பட்டும் சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்திய எதிரியின் செய்கையானது பிரிவு 304(A) of IPC–ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இவ்வழக்கின் இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து எதிரி மீது பிரிவு 304(A) IPC–ன் கீழ் நடவடிக்கை தொடர போதிய முகாந்திரம் இருந்ததால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டு எதிரிக்கு போதிய அவகாசம் கொடுத்து எதிரி மீது பிரிவு 304(A) IPC–ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:–

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா 7 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :–

(1) அ.சா. 1 **திருமதி. லீலா** தனது சாட்சியத்தில் தான் தற்போது சிறுகமணியில் வசித்து வருவதாகவும், கடந்த 28.11.2009 அன்று காலை 06.15 மணிக்கு தான் கடைக்கு டீ வாங்க சென்றபோது எம்.எம்.எம் என்ற பேருந்து தனக்கு முன்னால் சென்ற பையன் மீது மோதியதாகவும், தான் போய் பார்த்தபோது அது தனது மகன் கார்த்திக் என்றும், ஆஜர் எதிரி தான் அந்த பேருந்தை வேகமாகவும், தாறுமாறக ஓட்டி வந்ததால் விபத்து

ஏற்பட்டதாகவும், அன்றைய தினமே புகாரை தான் எழுதி கொடுத்ததாகவும், அந்த புகார் அ.சா.ஆ.1 என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும், அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2 **திரு. ரத்தினகிரி** தனது சாட்சியத்தில் தான் சிறுகமணியில் வசித்து வருவதாகவும், அ.சா.1 தனக்கு பக்கத்து வீடு என்றும், கடந்த 28.11.2009 அன்று காலை 06.25 மணியளவில் தான் மலையாளம் கடையில் டீ குடித்து கொண்டிருந்ததாகவும், அ.சா.1ன் மகன் கார்த்திகேயன் பெரியப்பா கடைக்கு சைக்கிளை கொண்டு வந்து ஓரமாக நிறுத்தியதாகவும், அப்போது எம்.எம்.எம் ஓரமாக நின்றிருந்த கார்த்தி மீது மோதியதாகவும், ஆஜர் எதிரிதான் அன்றைய தினம் பேருந்தை ஓட்டியது போல் தெரிந்தது என்றும், சம்பவ இடத்திலேயே கார்த்தி இறந்து விட்டதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும், அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3 **திரு. ரத்தினம்** தனது சாட்சியத்தில் தான் தற்போது சிறுகமணியில் வசித்து வருவதாகவும், அ.சா.1ஐ தனக்கு தெரியும் என்றும், கடந்த 28.11.2009 காலையில் தன் கடையில் தான் இறந்த கார்த்தி சைக்கிளை நிறுத்த வந்ததான் என்றும், அப்போது எம்.எம்.எம் பேருந்து வேகமாக வந்து மோதிவிட்டதாகவும், அதில் அடிப்பட்டு கார்த்தி இறந்துவிட்டதாகவும், வண்டியை யார் ஓட்டி வந்தது என்று தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும், அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

(4) அ.சா.4 **திரு.மகேஸ்குமார்** தனது சாட்சியத்தில் தான் தற்போது பெருகமணியில் வசித்து வருவதாகவும், கடந்த 28.11.2009 அன்று காலை 08.00 – 08.30 மணியளிடிவல் இந்த விபத்து நடந்ததாகவும், விபத்து நடந்த இடத்தில் போலீசார் பார்வை மகசர் வரைபடம் தயார் செய்த போது தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும், அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார்.

(5) **அ.சா.5 திருமதி. மீராபாய்** தனது சாட்சியத்தில் தான் தற்போது துறையூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்ததாகவும், கடந்த 28.11.2009 தேதி தான் ஜுயபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறுகமணியை சேர்ந்த கண்ணன் மனைவி நீலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமாக புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.476/2009 இதச பிரிவு 304(A) பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிந்ததாகவும் , அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.அ.3 என்றும், இவ்வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளரின் விசாரணைக்கு சமர்ப்பித்துள்ளேன் என்றும், தான் பதிந்த முதல் தகவ்ல அறிக்கை குறித்து தங்கள் காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும், அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார்.

(6) அ.சா.6 **திரு. செந்தில்குமார்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருச்சி மாவட்டம், சிறுமணி சிவன் கோவில் தெருவில் வசித்து கடை வியாபாரம் செய்து வருவதாகவும், தன்னிடம் கா ட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 28.11.2012 அன்று காலை சுமார் 08.30 மணியளவில் சிறுகமணி பேருந்து நிலையம் மேற்புறம் ஒரு பையனுக்கு விபத்து ஏற்பட்டது தொடர்பாக ஜுயபுரம் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமசகர் வரைபடம் வரைந்தததாகவும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும், அது அ.த.சா.ஆ.2 என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும், அ.சா.6 சாட்சியம் அளித்துள்ளார்.

(7) அ.சா.7 **திரு.ரவிசக்கரவர்த்தி** தனது சாட்சியத்தில் தான் தற்போது தேனி மாவட்ட மதுவிலக்கு அமலாக்கபிரிவு காவல் துனை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28.11.2009 ம் தேதி சோமரசம்பேட்டை ஆய்வாளராக பணியாற்றியபோது பொறுப்பு ஜீயபுரம் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருச்சி பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திருமதி. மீராபாய் என்பவர் பணியில் இருந்தபோது கண்ணன் (எ) வைரபெருமாள் மனைவி லீலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 476/2009 சட்டப்பிரிவுகள் 304(A) இதசவின் கீழ் முதல் தகவ்ல அறிக்கை பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை ஏற்கனவே அ.சா–ஆ–3 என்றும், பின்னர் வழக்கு

கோப்புகளை உதவி ஆய்வாளர் மேல் விசாரணைக்காக எனது பார்வைக்க வைத்ததாகவும், பின்னர் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் 28.11.2009 ம் தேதி காலை 08.30 மணி அளவில் சம்பவம் இடம் சென்று சாட்சிகள்செந்தில்குமார், மகேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 என்றும், பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் அன்றையதினமே இரவு 19 மணி அளவில் நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், பின்னர் விபத்தில் இறந்த கார்த்திக் (எ) கார்த்திகேயன் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கைதிருச்சி அரசு மருத்துவமனையில் வைத்து தயார் செய்தேன் என்றும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ–5 என்றும், பின்னர் சாட்சிகள் லீலா, இரத்தினகிரி, குமார், திருமலை, பெரியசாமி, இரத்தினம், செந்தில்குமார், மகேஷ்குமார், ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் இறந்த கார்த்திக் (எ) கார்த்திகேயன் மீதுபிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவலர் முருகன் என்பவர் மூலம் திருச்சி அரசு மருத்தவமனை மருத்துவக்கல்லூரி பேராசிரியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன் என்றும், பின்னர் மருத்துவர் திரு. கார்த்திகேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அவர்களிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன் என்றும், மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், பின்னர் விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்து ஏற்படுத்திய TN–47 V–9699 என்ற Ashok leylond பேருந்தை ஸ்ரீரங்கம் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்வு அனுப்பிவைத்தேன் என்றும், பின்னர் மோட்டாா வாகன ஆய்வாளர் திருமதி. சித்ரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடமிருந்து மேற்படி பேருத்தின் ஆய்வறிக்கை பெற்றேன் என்றும், அந்த TN–47 V–9699 என்ற Ashok leylond பேருந்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 என்றும், பின்னர் தலைமை காவலர் முருகன் மற்றும் , காவல் உதவி ஆய்வார் திருமதி. மீராபாய் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து ஆஜர் எதிரி மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதிஅறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்ததாகவும், அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார்.

6. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரி அதை மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரி மீது இசத பிரிவு 304(A) –ன் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8. **தீர்வு** :–

I) ஜீயபுரம் காவல் நிலைய சரக எல்லைக்குட்ப்பட்ட சிறுகமணியில் திருச்சி – கரூர் மெயின்ரோட்டில் கடந்த 28.11.2009 ந்தேதி காலை 06.15 மணிக்கு இறந்து போன கார்த்திக் @ கார்த்திகேயன் சிறுகமணி மெயின்ரோட்ல் இடதுபுறம் ஓரமாக நின்றுக் கொண்டிருந்த பொழுது எதிரி மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 47 V 9699 MMM என்ற பேருந்தினை எதிரி அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து கார்த்திக் மீது மோதியதில் அவர் தலையின் பின்புறமும், இடது கண் புருவம், முழங்கால் , இடது தொடையில் காயம் ஏற்பட்டும் சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்திய எதிரியின் செய்கையானது பிரிவு 304(A) of IPC –ன் கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) வழக்கில் புகார் சாட்சியான ***" அ.சா.1 லீலா தனது குறுக்கு விசாரணையில் புகார் நான் சொல்ல ஒருவர் எழுதினார் யார் என்று எனக்கு தெரியாது கையெழுத்து மட்டும் போட்டேன் அதில் என்ன எழுதினார்கள் என்று தெரியாது. டமார் என்று சத்தம் கேட்டு போய் பார்த்தபோது எனது மகன் இறந்து கிடந்தான். அப்போது சுமார் 50 பேர் இருந்தார்கள். யார் யார் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.'*** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii) வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.2 ரத்தினகிரி மற்றும் அ.சா.3 ரத்தினம் ஆகியோர்களை புலன் விசாரணை அதிகாரி சம்பவத்தை பற்றியும் கூறுவார்கள் என்று இறுதியறிக்கை தாக்கல் செய்திருந்தார். " *அ.சா.2 ரத்தினகிரி தனது முதல் விசாரணையில்* ***" ஆஜர் எதிரி தான் அன்றை தினம் பேருந்தை ஓட்டியது போல் தெரிகிறது என்றும்,*** *அவ்வாறே அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில்* ***சம்பவத்தின் போது நான் டீ குடித்து கொண்டிருந்தேன். டீ குடிக்கும் போது டமார் என்று சத்தம் கேட்டு திரும்பி பார்த்த போது தான் கார்த்தி அடிப்பட்டு கிடந்தான் "*** என்று சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறே அ.சா.3 ரத்தினம் தனது முதல் விசாரணையில் " வண்டியை யார் ஓட்டி வந்தது என்று தெரியாது என்றும், தனது குறுக்கு விசாரணையில் ***" ரத்தினகிரி தனது குறுக்கு விசாரணையில் எனது கடை ரோட்டின் மேலே உள்ளது. சம்பவம் மண் ரோட்டில் நடைபெற்றது. அடிப்பட்டவுடன் நடுரோட்டில் கிடந்தார். இந்த விபத்திற்கு என்ன காரணம் என்று எனக்கு நேரடியாக தெரியாது "*** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

IV) அ.சா.4 பார்வை மகசர் சாட்சி முதல் விசாரணையில் தன்னை கையெழுத்து போட சொன்னதால் தான் கையெழுத்து செய்தேன் என்றும், அ.சா.4 பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சாட்சியம் அளித்து அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

iii) அ.சா.7 விசாரணை அதிகாரி அவரது குறுக்கு விசாரணயில் அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெற்றேன். போலீசார் விசாரணையில் புகார்தாரர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று உள்ளது என்னும்போது முதல் விசாரணையில் கூறிய விவரங்களும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள விவரங்களும் முன்னுக்கு பின் முரனாக உள்ளது என்றால் சரியல்ல. என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே புகாரானது அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் புகாரில் உள்ள விவரம் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள பட்சத்தில் புகார் பற்றிய சங்கதிகளை அரசு தரப்பு சரிவர நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

iv) அ.சா.7 தாக்கல் செய்துள்ள இறுதியறிக்கைகு ஆதரவாக அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பு சாட்சிகள் யாரும்

சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் இல்லை. எதிரி சம்பவத்தின்போது அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தார் என்றும் எந்த ஒரு சாட்சியமும் முன்னிறுத்தாத பட்சத்தில் எனவே **மாண்பமை உச்ச நீதிமன்றம் 2022 Live Law (SC) 489 N.V.RAMANA; CJI., KRISHNAMURARI;J.,HIMAKOHLI;J. Nanjundappa & Anr. Vs. The State of Karnataka என்ற தீர்ப்பில்**

> *" For bringing home the guilt of the Accused, prosecution has to firstly prove negligence and then establish direct nexus between negligence of the Accused and the death of the victim " .*

என்று மாண்பமை உச்சநீதிமன்றம் வழிகாட்டுகிறது. எனவே, இவ்வழக்கில் எதிரி தான் அஜாக்கிரதையாக வாகனத்தை இயக்கி வந்து விபத்தில் இறந்தவரின் இறப்பிற்கு காரணம் என்று அரசு தரப்பில் சரிவர நிரூபிக்கவில்லை. மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, எதிரி மீதான இதச பிரிவு 304(A)ன் கீழான குற்றச்சாட்டினை வழக்கின் எந்த ஒரு ஆக்க கூறுகளும் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, அரசு தரப்பில் எதிரியானவர் பிரிவு 304(A) IPC–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.
எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு மே திங்கள் 19 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

K VIJAI RAJESH
Digitally signed by K VIJAI RAJESH

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

இணைப்பு :

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திருமதி. லீலா

அ.சா 2 : திரு. ரத்தினகிரி

அ.சா 3 : திரு. ரத்தினம்

அ.சா 4 : திரு. மகேஸ்குமார்

அ.சா 5 : திருமதி. மீராபாய்

அ.சா 6 : திரு. செந்தில்குமார்

அ.சா 7 : திரு. ரவிசக்கரவர்த்தி ( காவல் உதவி ஆய்வாளர் )

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 25.02.2013 புகார்

அ.சா.ஆ. 2 : 25.02.2013 பார்வை மகஜர்

அ.சா.ஆ. 3 : 12.09.2013 அச்சு முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 : 01.04.2025 மாதிரி வரைபடம்

அ.சா.ஆ. 5 : 01.04.2025 பிரேத விசாரணை அறிக்கை

அ.சா.ஆ. 6 : 01.04.2025 பிரேத பரிசோதனை அறிக்கை

அ.சா.ஆ. 7 : 01.04.2025 மோட்டார் வாகன ஆய்வறிக்கை

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:–இல்லை

எதிரி தரப்பில் சாட்சிகள் :– இல்லை

எதிரி தரப்பில் சான்றாவணம் :– இல்லை

K VIJAI RAJESH Digitally signed by K VIJAI RAJESH

மாவட்ட உரிமையியல் மற்றும்

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஸ்ரீரங்கம் .

**நகல்கள்**

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்

3. காவல் ஆய்வாளர், பெட்டவாய்த்தலை காவல் நிலையம்.

குறிப்பு : அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.